[மலர் 8] [பகுதி 8

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ௵ கார்த்திகை ௴

NOVEMBER 1943

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. முதியோர் கல்வியின் அவசியமும் அதற்கான ஓர் திட்டமும் 413
—K. ராமச்சந்திர ராவ்

2. ஆரம்ப நிலையில் பாஷைப்பயிற்சி ... .... .... 418
—M. K. சிவராமன்

3. பூகோள சாஸ்திரம் .... .... .... .... 424
—S. ராமஸ்வாமி ஐயங்கார்

4. செய்தித் திரட்டு .... .... .... 428

5. பத்திராதிபர் குறிப்பு ... .... .... 432


## சந்தாதாரர்களுக்கு அறிக்கை

சந்தாதாரர்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில், அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதாரர்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 நவம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

செங்கற்பட்டு — Ch. 11.
வட ஆற்காடு — NA. 33.
தென்னாற்காடு — SA. 2, 78.
தஞ்சாவூர் — Tan. 27, 34-A.
திருச்சி — Tri. 18, 20.
திருநெல்வேலி — Tin. 28.
கோயமுத்தூர் — Co. 54.
வெளிநாடுகள் — Mis. 52.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 8 | 1943 ௵ நவம்பர் ௴<br>ஸுபாநு ௵ கார்த்திகை ௴ | பகுதி 8 |
|---|---|---|

## முதியோர் கல்வியின் அவசியமும் அதற்கான ஓர் திட்டமும்

By. K. Ramachandra Rao,
*[Headmaster, Board School, Elukkur, Tanjore District]*

### முதியோர் கல்வியின் அவசியம்.

நம் நாட்டில் அறிவினால் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவற்றிருப்பினும், துணைக்கருவியாயுள்ள நூல்கள் மலிந்து குவிந்திருப்பினும், அரசாங்கத்தாரும்; இன்னும் பிறரும் நமது நாட்டில் கல்வியைப் பரப்புவதற்கு முயன்றுவந்த போதிலும், 100-க்கு 12 பேர் வீதமே கல்வி அறிவுள்ளவர்களாய் இருக்கின்றனர். மேல் நாடுகளிலோ கல்வியறிவில்லாதவர்கள் 100-க்கு மூன்றிலும் குறைவு. இந் நிலையிலுள்ளவர்கள் நம் நாட்டில் 90% கிராமவாசிகளே. ஆகவே இவர்கள் கல்வி கற்றுக்கொண்டால் அல்லவோ தங்கள் குழந்தைகளை ஆரம்பப் பாடசாலைகளுக்கு 1-முதல் 5-வது வகுப்பு முடியவாவது அனுப்பவேண்டும் என்று உணர்ந்துகொண்டு அனுப்ப ஆரம்பிப்பார்கள். அப்பொழுதல்லவோ ஆரம்பப் பாடசாலைகளில் அபிவிருத்திகள் அதிகரிக்கும். ஆஜர் அபிவிருத்தி, தேக்கம், மேல்வகுப்புகளில் மாணவர் சங்கியை அதிகரித்தல் போன்ற பிரசினைகளை வெகு இலகுவாய் முடித்துவிட்டு மனதுக்கு ஓர் நிம்மதியையும் ஆரம்பாசிரியர் அடையமுடியும்.

ஆகவே நமது தேசமக்களை இருள்போல் சூழ்ந்திருக்கும் இவ்வறியாமையைப் போக்குவதற்கு அரசாங்கத்தாரும், தேச முன்னேற்றத்தை விரும்பும் பல பிரமுகர்களும் ஒன்றுகூடி இம்முதியோர் கல்வியின் அவசியத்தைக் கருதி அதற்கான ஓர் திட்டத்தைத் தயார் செய்ய வேண்டியதாயிருக்கிறது என்பது என் தாழ்ந்த அபிப்பிராயம்.

இதற்காக படிப்பில்லாத எல்லோருக்கும் கல்வி கற்றுக்கொடுத்துவிடவேண்டும் என்ற பேரெண்ணம் இங்கு இல்லை. முடிந்தால் சந்தோஷமே. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற பழைய பெரியோர் வாக்கை யனுசரித்து முக்காலணா கொடுத்து ஒரு கார்டு வாங்கி எழுதவும்—படிக்கவும்—ஏன், ஐந்தாவது வகுப்புப் பையனுக்குத் தெரிந்த அளவாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்பது இம்முதியோர் கல்வியின் நோக்கம்.

அஞ்ஞான இருள் நீங்கி, ஞான ஒளி ஓங்க, கல்வி அவசியம் வேண்டும். கல்வியில்லாத ஊரை தீக்கிரையாக்கலாம். தூபதீபம் காட்டுவதா சரஸ்வதி ஆராதனை. கல்வி கற்று அறிவைப் பெருக்குவதே ஆகையால்,

"வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி"

வேண்டுமென்கிறார் நமதரும் கவிச் சக்கரவர்த்தி பாரதியார். அதற்குப் பொருள் வேண்டுமே என்பதற்கு "ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்" எனக் கூவி அழைக்கிறார். இனி இதற்கான திட்டத்தை எளியேனுக்குத் தெரிந்தவரையில் இதனடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

### மாணவர்கள்

வயது முதிர்ந்த பெரியோர்களும், சிறு வாலிபர்களும் ஒன்றாய் ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்து படிக்க விரும்பமாட்டார்கள். ஆதலால் இவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கவேண்டும். நன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டும் என்பவர்களுக்குத் தேர்ச்சி மெதுவாயும், நிலையாகவும் இருக்கும். மற்றவர்களும் படிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

### வேலை நேரம்

வாரத்திற்கு 5 நாள் வேலை செய்யவேண்டும்: 3 நாள் சாதாரணமாகச் சொல்லிக்கொடுத்தல்; ஒருநாள் புத்தகாலயத்தில் உள்ள புத்தகங்களை அவரவர்களுக்கு எதுவேண்டுமோ அதை வாசிக்கக் கொடுத்தல். பாக்கி ஒருநாள்—பஜனை செய்தல், உபன்னியாசம் செய்தல், மாஜிக்லாண்டர்ன் காண்பித்தல் முதலியன. பள்ளிக்கூட நேரம் இரவு 7½-முதல் 9½-வரையில் இருக்கலாம். (அந்தந்த ஊர்களுக்குத் தகுந்தாற்போல் மாற்றியுங் கொள்ளலாம்.)

### முதியோர்கள் கல்வி கற்பதால் நல்ல ஒழுக்கம் உண்டாதல்

முதியோர்கள் வந்து படிக்கும்பொழுது சுருட்டுக் குடித்தல், வெற்றிலை போட்டுக் கொள்ளுதல், மதுபானஞ் செய்தல் முதலிய வொழுக்கங்களை விட்டுவிடவேண்டி யிருக்கிறது. துர்ப்பாஷையில் பேசுதல், காலித்தனமாயிருத்தல் இவைகளைத் தங்கள் குருவைக் கண்டதும் தாங்கள் எவ்வளவு பெரியவர்களாய் இருந்தபோதிலும் விட்டு விட வழியேற்படுகிறது. முதியோர்கள் வாசித்துக் கெட்டிக்காரர்கள் ஆகவேண்டுமானால் உபாத்தியாயர்கள் முழு மனதுடன் வேலை செய்ய வேண்டும். முதியோர்கள் உற்சவகாலம், சாகுபடி காலம், அறுவடை காலம், கலியாண காலம் முதலிய காலங்களில் வருவது குறையும். மற்றக் காலங்களில் அதிகமாய் வருவார்கள். அப்போது வேலை நேரத்தை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்

### உபாத்தியாயரின் வேலையைப்பற்றிய ரிகார்டு

தினசரி வேலை செய்த விவரத்தைக் காட்டும் ரிகார்டு ஒன்று இருக்கவேண்டும். இதனால் உபாத்தியாயர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட முதியோர்களின் தேர்ச்சியைத் தெரிந்துகொள்ளலாம். புதிய உபாத்தியாயர்களுக்கும் இது உதவும்.

### எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் ஜாபிதா

தெருவாரியாக கணக்கெடுத்து வைக்கப்பட்ட படிக்காதவர்களின் ரிஜிஸ்டர் ஒன்று இருக்கவேண்டும். இது அவசியமானபோது பார்த்துத் தெரிந்துகொள்ள உபாத்தியாயருக்கு உதவுகிறது. பின்னால் வரும் தொண்டருக்கும் இது உதவும்.

### உபாத்தியாயர்

நல்ல ஒழுக்கம் உள்ளவராய் இருக்கவேண்டும். மிகுந்த அன்புள்ளவராயும், அமைவுடன் கூடிய நிர்மாண சக்தியுள்ளவராயும் இருக்க வேண்டும். முதியோர்களது வீட்டில் நடக்கும் சுபகாரியங்கள் முதலானவைகட்குப் போகவேண்டும். அவர்களோடு நெருங்கிப் பழகப்பழக நன்மதிப்புண்டாகும். சைதாப்பேட்டையில் செகண்டரி, L. T. மாணவர்கள் இம்முதியோர் கல்வியில் ஈடுபட்டு வேலை செய்கிறார்கள். இவ் வழக்கம் எல்லா ஊர்களிலும் நடத்துவது கஷ்டம். பகல் முழுவதும் வேலைசெய்யும் ஆசிரியர்கள் இராப் பாடசாலைக்கான விஷயங்கள் எல்லாவற்றிற்கும் முழுமையும் ஈடுபட்டு வேலை செய்வது சிரமமானது. ஆரம்பத்தில் இராப்பாடசாலையின் அபிவிருத்தியை உத்தேசித்துத் தங்களது மேலான யோசனைகளையும்; போதனைக் குறிப்புகளையும் வாலண்டியர்களுக்குச் சொல்லலாம்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாமல் இருப்பவர்கள், உயர்ந்த வேலைவேண்டும் என்பவர்கள், ஆகிய இவர்களின் ஜாபிதா ஒன்று தயாரித்து வைக்கப்படவேண்டும். அதோடுகூட வேலை கொடுப்பவர்—அவரிடம் வேலை பார்ப்பவர்கள்—இவர்களது ஜாபிதா ஒன்றும் இருந்தால் நல்லது. வேலை கொடுப்பவர்களை அடிக்கடி போய் பார்க்க உதவும். அவர்கள் இப்பாடசாலையில் நெருங்கிப் பழகும்படிச் செய்யவேண்டும்.

### எது உண்மையாக வேண்டுமோ அதைப் போதித்தல்

ஒரு வாலிபன் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் தெரிந்துகொள்ளலாம் என்று இப்பாடசாலைக்கு வரலாம். ஒரு வியாபாரி கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத விரும்பலாம். ஆங்கிலம் தெரிந்த ஒரு பையன் ஒரு குமாஸ்தா வேலை செய்ய ஆசைப்படலாம். ஒரு தபால்காரன் அட்ரஸை வாசிக்கக் கற்றுக்கொள்ள விரும்பலாம். ஒரு நெசவாளி சில செய்யுட்களைப் படிக்க விரும்பலாம் ஆகையால் இவைகளை மனதில் கொண்டவராய் ஊக்கங் குன்றாமல் தொண்டர் வேலைசெய்ய வேண்டும்.

## முதியோர்களைப் படிக்க வருவதற்கு கவர்ச்சி செய்யும் விதம்

### படக்காக்ஷி (Cinema)

இந்தியாவில் உள்ள கிராம வாழ்க்கையைப்பற்றி சில (Amateur) நடிகர்களைக்கொண்டு படம் பிடித்து கிராமந்தோறும் சினிமாப்படங்கள் காட்டப்பட வேண்டும். சுகாதாரப் படக்காக்ஷிகளும் காட்டப்பட வேண்டும்.

### ஒலி பரப்புங்கருவி (Radio)

இக்கருவி பாஷாஞானத்தை அடையவும், சுத்தமாய்ப் பேசவும் உதவுகிறது. சங்கீதம், வர்த்தகம், கல்வி, விவசாயம், உள்நாடு, வெளிநாடு முதலியவைகளைப்பற்றிய விஷயங்களைப் படிக்கத் தெரியாதவர்கள் கூட தெரிந்துகொள்ள முடிகிறது. இதன் உதவியை என்னென்று கூறுவது! முதியோர்கல்வி விஷயமாய்த் துண்டுக் காகிதங்களில் பிரசுரம் செய்திருப்பவைகளை ஒலிபரப்புங் கருவியின்மூலமாய்ப் பரவச் செய்யலாம். ஒரு விவசாயி, வலைஞன் இவர்களைக்கொண்டும் ரேடியோவில் பேசச்செய்து ஒலி பரப்பலாம். ஏனென்றால் அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவர்கள் மனதில் உள்ளதைத் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றி விவரமாய்ச் சொல்லும்படி செய்யலாம். ரேடியோக்களில் நடக்கும் கிராம நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்திகளைக் கிராமத்தார்கள் கேட்டால் தாங்களாகவே முன்னேற்றமடைய முற்படுவார்கள் என்னலாம். ஆகவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொது

ரேடியோ இருக்கவேண்டியது என்பது அவசியம். இதைப் பஞ்சாயத்து போர்டு - ஐக்கிய நாணயச்சங்கம் இவைகளின் உதவியால் ஏற்படுத்திக் கொள்ளலாம்.*

பண வசதி

முதியோர் கல்வி பாடசாலைக்கான இடத்திற்காக கிராம பாடசாலையை சம்பந்தப்பட்ட மானேஜ்மெண்டாரின் உத்தரவின்மேல் உபயோகப்படுத்தலாம். விளக்கு, புத்தகம் வகையறாவுக்கு அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்கள்தான் உதவி செய்யவேண்டும். இவைகளுக்காக பணங் கொடுத்து உதவ மாகாண சட்டசபைகளின் மூலமாய் மசோதாக்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டும். அவசியமானால் கல்வி வரியை உயர்த்தலாம்.* படித்து வேலையில்லாமல் இருப்பவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்கும்வரையில் தாங்கள் இருக்கும் ஊரிலேயே சிறிது தியாக உணர்ச்சியுடன் முதியோர்களுக்குக் கல்வி புகட்ட முன் வந்தால், அவர்களது வாழ்க்கையின் வெற்றிக்கு முதற்படியாகும் என்னலாம். ஹைஸ்கூல், கலாசாலை மாணவர்கள் விடுமுறை நாட்களில் கிராமங்களுக்கு வந்து, முதியோர்களுக்குக் கல்வி புகட்டும் தொண்டில் ஈடுபட்டு உழைக்கலாம். இம்மாதிரித் தொண்டில் ஈடுபட்டுழைப்பவர்களுக்கே உத்தியோகம் கொடுக்கும் விஷயத்தில் சலுகைக் காட்டப்படவேண்டும். ஆகவே இவ்வேற்பாட்டிற்கு எல்லோரும் சகாயம் செய்யக்கூடும். பணக்காரர்கள் பணம் கொடுத்தும், ஏழை ஜனங்கள் கைங்கர்யம் செய்தும் புத்திசாலிகள் ஆலோசனைகளைத் தெரிவித்தும், பால்யர்கள் சேவை செய்தும், எல்லோரும் இதைப்பற்றி நினைத்தும், பிறருக்குச் சொல்லியும் சகாயம் செய்யலாம். இக்கட்டுரையை முடிக்குமுன் "Each one Teach one," (ஆளுக்கொருவரை அறிஞராக்குமின்) என்னும் பழமொழி என் ஞாபகத்திற்கு வருகிறது. அதன்படி நம் நாட்டில் எழுத்தறிவு இயக்கம் பரவும்படி அருள் புரியுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

"நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!"

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

---

* தஞ்சை ஜில்லா போர்டில் கிராம முன்னேற்ற மோட்டார் கிராமந்தோறும் வந்து பிரசாரம் செய்வது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

# ஆரம்ப நிலையில் பாஷைப் பயிற்சி
# (அனுபவ முறை)

M. K. சிவராமன், தலைமை ஆசிரியர்,
[போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாமிரெட்டிப்பட்டி]

ஒரு குழந்தை சிறந்த அறிவைப் பெறவும், அதனுடைய பிற்கால வாழ்க்கையில் சமூகத்துடன் அது ஒற்றுமையுடன் வாழவும், அது மேற்கொள்ளும் எத்தொழிலையும் செவ்வனே செய்து முடிக்கவும் கல்வி ஒரு இன்றியமையாத சாதனமாகும். அக்கல்வியைச் சிறந்த முறைகளின் மூலம் கற்றுத் தெளிய தாய்மொழியை அது நன்றாகவும் பிழையறவும் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு வாழ்க்கைக்கு உறுதுணையான தாய்மொழியை போதிப்பதில் முதல் வகுப்பு ஒரு ஆரம்பமாக இருக்கிறது. இக்காரணங்களால் ஒவ்வொரு முதல் வகுப்பு ஆசிரியரும் தாய்மொழி போதிப்பதின் நோக்கத்தை மனதில் வைத்து

"கற்கக் கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று பொய்யாமொழிப்புலவர் உரைத்ததுபோல, திருத்தமாகவும் பிழையறவும் கல்வி கற்பித்தல்வேண்டும். முதல் வகுப்பு ஆசிரியர் தன்னுடைய கல்வித் தேர்ச்சிக்கேற்ற பாஷையிலும் நடையிலும் பேசுதல் கூடாது. ஆனால் அவர் குழந்தையோடு குழந்தையாயிருக்கும் பழக்கத்தை முதலில் பெறவேண்டும். அம்மாதிரி இருப்பதுடன் அவர் ஆரம்பத்தில் குழந்தைகளின் கொச்சை மொழிகளிலும் ஒருவித ஆவல் காட்டுதல் வேண்டும். இக்கொச்சைமொழிகளை சம்பாஷணை மூலம் சிறிது சிறிதாக அகற்றுதற்கு ஆசிரியர் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

புதிதாக பள்ளியில் சேரும் ஒரு குழந்தைக்கு ஆசிரியர் என்று சொன்ன மாத்திரத்திலும், ஆசிரியரைக் கண்டவுடனும், பயம் ஏற்பட்டுப் பள்ளிக்கூடத்தின்பேரில் வெறுப்பு ஏற்படுகிறது. இது பலவிதங்களில் ஏற்படுகிறது. பெற்றோர்கள் குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும் சமயத்தில் "இனிமேல் நீ இம்மாதிரி விளையாட முடியாது. உன்னை பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய்விட்டு உபாத்தியாயரை நன்றாக அடிக்கச் சொல்லுகிறேன்" என்று சொல்லுவதாலும், அக்குழந்தையின் சிநேகிதர்கள் விளையாட்டிற்காக "பள்ளிக்கூடம் வா, வாத்தியார் நன்றாக அடிக்கிறார்" என்று சொல்லுவதாலும், குழந்தை பள்ளியில் சேர்ந்தவுடன் அவனுடன் இருக்கும் குழந்தைகளைப் பயமுறுத்துவதாலும், அடிப்பதாலும் புதிதாகச் சேர்ந்த குழந்தைக்கு ஒருவித பயமும், பள்ளியின்மேல் ஒருவிதமான வெறுப்பும், இது வரையிலும் சுயேச்சையாக விளையாடிக்கொண்டிருந்த தனக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டதற்கு ஒருவித ஏமாற்றமும் அடைய ஏதுவாகிறது.

முன்கூறப்பட்ட குறைகள் நீங்க ஒரு ஆசிரியர் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். முதல் வகுப்பு ஆசிரியர் "பொறுமை கடலினும் பெரிது" என்றபடி கோப மற்றவராய், பொறுமையே பூஷண மாகக் கொண்டவராய் இருத்தல் வேண்டும். அவர் குழந்தைகளின் பேரில் அன்பும் அபிமானமும் உடையவராய், வகுப்பிலுள்ள ஒவ்வொரு சிறுவனையும் தன் குழந்தையிலும் பன்மடங்கு பிரியத்துடன் நடத்துதல் வேண்டும். அதுபோலவே குழந்தைகளுக்கும் ஆசிரியரிடம் ஆவல், அன்பு முதலியன ஏற்படும்படி அவர் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆகவே ஒரு குழந்தை பள்ளியில் சேர்ந்த முதல் இரண்டு மாதங்களில், குழந்தைகளின் பயத்தையும் சங்கோசத்தையும், பாடசாலையின்மேல் ஏற்பட்டிருக்கும் வெறுப்பையும் போக்கி உற்சாக முண்டாகும் முறையில் சம்பாஷணைகள் செய்தல் வேண்டும். முதலாவதாக குழந்தைகளுடைய வீட்டைப்பற்றியும், வீட்டு அனுபவத்தைப் பற்றியும், உதாரணமாக தம்பி, தங்கையின் பிறப்பு, காதுகுத்தல், ஊருக்குப்போதல் முதலியனவும், வீட்டிலுள்ளவர்களின் பெயர், அவர்களின் தொழில், சொந்தம், சமையல், சாப்பாடு, சாப்பாட்டுநேரம் முதலிய விஷயங்களைப் பற்றியும், தோழர்களைப் பற்றியும் தன்னுடன் பேசப் போதிய அவகாசம் ஆசிரியர் அளித்தல் வேண்டும். இரண்டாவதாக, குழந்தைகளுக்கு செவிப் பயிற்சிதர நல்ல சிறுகதைகள் சொல்லவேண்டும். படங்களுடன் கூடிய கதைகளாகவும் ஒரே ஒரு சம்பவத்தைச் சொல்லக்கூடியதாகவும், படம் படித்தல் போன்ற கதைகள் இருக்கவேண்டும். (உ-ம்.) காக்கையும் நரியும், நாயும் நிழலும், காகமும் குடமும், நரியும் திராக்ஷைப் பழமும் முதலியன. பாட்டுக்களைக் கேட்பதிலும், நல்ல பாட்டுக்களைப் பன்முறை சொல்லுவதிலும் குழந்தைகளுக்கு ஆவல் அதிகம். ஆகையால் ஆசிரியர் சுலபமான பாஷையில் நல்ல இராகத்துடன் பிள்ளைகளுக்கு பாட்டுக்கள் போதிக்க வேண்டும். ஆசிரியர் பாடிய பின்பு குழந்தைகளைப் பாடும் படிச் செய்யவேண்டும். முரசு, பாப்பா பாட்டு போன்றவைகளை மிகவும் நன்றாக ரசிக்கிறார்கள். ஆகவே முதல் இரண்டு மாதங்களில் முதல் வகுப்பில் குழந்தைகளுடைய அனுபவத்தை ஒட்டிய சம்பாஷணைகளாகவும், கதைகளாகவும், பாட்டுக்களாகவும் இருக்கவேண்டும்.

செவிப்பயிற்சியில் தகுந்த தேர்ச்சி அடைந்தவுடன் பாஷைகற்பித்தலில் இரண்டாம்படி உச்சரிப்புப் பயிற்சியாகும். ஆகவே ஆசிரியர் குழந்தைகளுடன் சம்பாஷிக்கும்போதும் கதைகள் சொல்லும் போதும் உபயோகிக்கும் பாஷையும் வார்த்தைகளும் அவர்களுக்குத் தெரிந்தவைகளாக இருக்கவேண்டும். குழந்தைகளை அவர்கள் கேட்ட கதைகளைத் திருப்பிச் சொல்லும்படி செய்யவேண்டும். இச்சமயத்தில் தான் உச்சரிப்பு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஆசிரியர் பிழையில்லாமலும் சரியான உச்சரிப்புடனும் வார்த்தைகளைச் சொல்லவேண்டும். தவறான உச்சரிப்புகளைக் கைக்கொண்டால் குழந்தைகளுடைய உச்சரிப்பைத்

திருத்துவது கடினம். இவ்வகுப்பில் குழந்தைகள் ஆசிரியர் பேசுவது போல் பேச ஆவல் கொள்வார்கள். அதனால் ஆசிரியர் தான் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் திருத்தமாக உச்சரித்தல் வேண்டும். குழந்தைகள் கதைகளைத் திருப்பிச் சொல்லும் போதும், அவர்களுக்குத் தெரிந்த வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்கும்படிச் செய்யவேண்டும்.

குழந்தைகளிடம் முதல் இரண்டு மாதங்களில் சம்பாஷணைகள், கதைகள், பாடல்கள் நடத்திய பிறகு, கல்வி கற்க அடிப்படையான பாஷைப்பயிற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும். பாஷையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ள மேற்கூறியவைகள் சாதனங்களாகும். இப்பாஷைப் பயிற்சியை குழந்தை பள்ளியில் சேர்ந்த மூன்றாவது மாதத்திலிருந்து தொடங்கலாம். இச்சமயத்தில்தான் மின் அட்டைகள் (Flash Cards) உபயோகிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆசிரியர் பல விதமான மின்னட்டைகளை முன்பாகவே தயார்செய்து கொள்ளவேண்டும். முதல் வகுப்புக்குக் கற்பிக்கப்போகும் 300 வார்த்தைகளுக்கும் மின்னட்டைகள் இருத்தல் வேண்டும். இவ்விதமான மின்னட்டைகள் பாஷா போதனையில் ஆசிரியரின் சிரமத்தை பன் மடங்கு குறைக்கின்றன.

வெவ்வேறு வித மின்னட்டைகள் :—முதல்படியாக உபயோகிக்கும் மின் அட்டைகள்: படமும் அப்படத்தின் பெயரைக்குறிக்கும் வார்த்தையும் அதன் கீழ் எழுதப்பட்டிருப்பது. இதனால் சிறுவர்கள் படத்தையும் எழுத்துச் சித்திரத்தையும் (Word Picture) ஒரே சமயத்தில் அடிக்கடி பார்ப்பதால் அவ்வார்த்தைச் சித்திரம் அப்படத்தின் பெயர் என்பதை அவர்கள் அறிகிறார்கள். இம்மாதத்தில் 18 மெய்யெழுத்துக்கள் வார்த்தைகளின் மூலம் அறிந்துக்கொள்ள முடியும். இதற்குத் தேவையான மின்னட்டைகள் ஆசிரியர் தயார் செய்து கொள்ளவேண்டும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளைக்கொண்டு அவைகளைத் தயார் செய்துகொள்ளலாம்.

படம், மரம், மஞ்சள், ரம்பம், வட்டம், சட்டம், சங்கம், கலயம், தட்டம், வயல், பழம், நகம், பவளம், சன்னல், பற்கள், கண், பட்டம், டப்பா.

மின்னட்டைகள் தயார் செய்யும்பொழுது, நாம் கற்பிக்க நினைக்கும் எழுத்தை வேறு வர்ணத்தால் காட்டவேண்டும். மாதக்கடைசியில் குழந்தைகள் 18 மெய்யெழுத்துக்களையும், அவைகளைக்கொண்ட வார்த்தைகளையும் கற்றுக் கொண்டார்களா என்பதை அறியவேண்டும். இதற்காகச் சில அப்பியாசங்களைக் கொடுக்கவேண்டும். இப்படிச்செய்ய இரண்டாவது படியை ஆரம்பிக்கிறோம். இதற்கு, இந்த இரண்டாவது படிக்குறிய மின்னட்டைகள் தயார் செய்துக்கொள்ள வேண்டும். முதல் படியில் உபயோகித்த 18 மெய்யெழுத்துக்கள் கொண்ட வார்த்தைச்

சித்திரங்கள் ஒரு பக்கத்திலும் அதற்குறிய படங்கள் மற்றொரு புறத்திலும் உள்ள தனித்தனி அட்டைகள் இருத்தல் வேண்டும். சிறுவர்களை முதலில் வார்த்தைச் சித்திரத்தை படிக்கும்படிச்செய்து அதை சரி பார்க்க அக்கடிதத்தின் மற்றொரு புறமுள்ள படத்தைப் பார்க்கும்படிச் செய்யவேண்டும்.

மூன்றும்படியாக, படங்கள் தனிக்கடிதங்களிலும், வார்த்தைகள் வேறு கடிதங்களிலும் இருக்கும்படி மின்னட்டைகள் அமைத்தல் வேண்டும். வகுப்பை இரு கட்சிகளாகப் பிரித்துக்கொண்டு ஒரு கட்சியில் படமும் மற்றொரு கட்சியில் வார்த்தைகளும் கொடுத்து படத்திற்குச் சரியான வார்த்தைகளை மற்றொரு கட்சியாரைக் காட்டும்படிச் செய்யலாம்.

சில படங்களையும் வார்த்தைகளையும் கொடுத்து படங்களையும் அவற்றைக் குறிக்கும் வார்த்தைகளையும் ஒன்றாகப் பொருத்தும்படிச் செய்யலாம்.

நான்காவதாக பதங்கள் அமைத்தற்குறிய தனி எழுத்துக்களைத் தயாரித்து படத்தின் பெயர்களைக் குறிக்கும் வார்த்தைகளை அமைக்கும் படிச் செய்யலாம். இந்நான்காவது அப்பியாசத்தின் மூலம் சிறுவர்கள் எழுத்துக்களை செவ்வனே அறிகிறார்கள். அவர்கள் இதுவரையில் கற்றுக்கொண்டுள்ள வார்த்தைகளைக் குச்சி வைத்தல், கொட்டை வைத்தல் முதலியவற்றின் மூலம் ஸ்திரப்படுத்தலாம். குழந்தைகள் கற்றுக் கொண்ட வார்த்தைகளின் ஜாபிதா படங்களுடன் அவர்களுக்குத் தெரியும் படியாக வகுப்பறையில் எப்பொழுதும் வைக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

சிறுவர்கள் 18 மெய்யெழுத்துக்களைக்கொண்ட வார்த்தைகளைக் கற்று, அவைகளை அடிப்படையாக்க் கொண்டு, அம்மாதிரியே அவர்களுக்கு 12 உயிர்எழுத்துக்களையும் பதங்கள் மூலம் கற்றுக்கொடுத்தல் வேண்டும். உயிர்எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்க சௌகரியமான மின்னட்டைகள் தயார் செய்துக்கொள்ள வேண்டும். இதை தயார் செய்வதற்குறிய வார்த்தைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஈ, அரம், ஆட்டம், உரல், ஊதல், ஐயர், எள், ஏற்றம் இரதம், ஒட்டகம், ஓடம், ஔடதம்.

இவ்வார்த்தைகளுக்கு 18 மெய்யெழுத்துக்கள் போதிப்பதற்கு உபயோகித்த பலவிதமான மின்னட்டைகளைப் போலவே இவற்றிற்கும் தயார் செய்து கொள்ளுதல்வேண்டும்.

இதுவரையில் சிறுவர்கள் கற்றறிந்த வார்த்தைகளைக் கொண்டே ஒருபடி அதிகமான சிறுவாக்கியங்களைப் போதிக்க ஆரம்பித்தல் வேண்டும். இவ்வாக்கியங்கள் இரண்டு வார்த்தைகள் உடையனவாய் இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | மர உரல் | தட்டம் வட்டம் |
| | ஈ படம் | மா ஏற்றம் |
| | மண் கலயம் | தச்சன் அரம் |
| | பந்தய ஆட்டம் | பம்பர ஆட்டம் |
| | எள் வயல் | பழ மரம். |

இதுவரையிலும் கற்றுள்ள வார்த்தைகளின் ஜாபிதாவைப் பார்த்துப் பிள்ளைகளைப் படிக்கும்படி செய்வதுடன் அவ்வார்த்தைகளாலான வாக்கியங்களை அமைத்துச் சொல்லும்படி அப்பியசிக்கவேண்டும்.

இச்சமயம் மாணவர்களுக்கு இயற்கையாகவே எழுதுவதில் ஒரு ஆசை ஏற்படுகிறது. இச்சந்தர்ப்பத்தை அவர்களுக்கு எழுத்துப் பயிற்சி அளிப்பதில் உபயோகித்தல் அவசியம். இம்மாதிரி செய்வதற்கு முன்பு சிறுவனுடைய மற்றொரு பொறியாகிய ஸ்பரிச உணர்ச்சிக்குப் (Sense of touch) போதிய அளவு பயிற்சி அளித்தல்வேண்டும். இதை அடியில் கண்டவிதம் செய்யலாம். ஒவ்வொரு அட்டையிலும் ஒரு எழுத்து விதம் பசையால் எழுதப்பட்டு அதன் மீது கருமணல் தூவப் பட்ட எழுத்துக்களை உபயோகிக்கலாம். மரப்பலகைகளில் செதுக்கப் பட்டு வர்ணம் தீட்டப்பட்ட எழுத்துக்களையும் உபயோகிக்கலாம். அல்லது அட்டைகளால் கத்தரிக்கப்பட்ட எழுத்துக்களை மரப்பலகைகளில் ஒட்டிவைத்துக் கொள்ளலாம். சிறுவர்களை அவ்வெழுத்துக்களை கையால் உணரச்செய்தும், அதன்மீது விரல்களால் எழுதும்படி செய்தும், அவ்வுணர்ச்சிக்குப் பயிற்சி அளிக்கலாம்.

இதுவரையிலும் அவர்கள் கற்றறிந்தனவும், குச்சி, கொட்டை முதலியவைகளால் வைக்கப்பட்ட எழுத்துக்களையும், வார்த்தைகளையும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதி அவைகளைப் பார்த்து குழந்தைகளை கரும்பலகையிலேயே எழுதும்படி செய்வதுடன் அவர்கள் எழுதிய வார்த்தைகளைப் படிப்பதிலும் பயிற்சி அளித்தல்வேண்டும். சிறுவர்களுக்கு எழுத்துப் பயிற்சி யளிப்பதில் ஆசிரியர் மிகுந்த கவனம் செலுத்துதல்வேண்டும். ஆசிரியர் வார்த்தைகளையோ வாக்கியங்களையோ கரும்பலகையில் எழுதும்பொழுது ஒவ்வொரு எழுத்தும் அதற்கு ஏற்ற உருவத்தில் இருக்கும்படி எழுதுதல் மிகவும் முக்கியமானது.

பின் மாதங்களில் மற்ற உயிர்மெய் யெழுத்துக்களாலாகிய வார்த்தைகளைப் போதித்தல் வேண்டும். இவ்வெழுத்துக்களைக்கொண்ட வார்த்தைகளுக்கு மின்னட்டைகளைப் படங்களுடன் தயாரித்துக் கொள்ளவேண்டும். இவ்வெழுத்துக்களின் அமைப்பில் ஏற்படும் மாறுதல்களைச் சிறுவர்கள் செவ்வனே அறிய, பெரிய எழுத்துக்களில் வார்த்தைகள் அமைக்கப் படவேண்டும். எழுத்துக்களின் மாறுபாட்டைக் காட்ட ஆசிரியர் தனி உபகரணம் ஒன்று தயார் செய்யவேண்டும். உதாரணமாக ஒரு அட்டையில் படம், மடம், பதம் முதலிய வார்த்தைகளும் மற்றொரு அட்டையில் பாடம், மாடம், பாதம் போன்ற வார்த்தைகளும் எழுதப்பட்டு

வித்தியாசத்தைக் காட்டலாம். இம்மாதிரி அமைக்கப்படும் அட்டைகள் நகரும்படி (Moving Slides) அமைத்தல் நலம். எழுத்துக்கள் வேறாகவும் அடையாளங்கள் (Symbols) வேறாகவும் கத்தரித்து அவைகளை ஒன்றாக பொருத்தும் அப்பியாசம் தரலாம். இதனால் எழுத்துக்கள் பிழையற எழுதும் பழக்கம் ஏற்படும்.

எல்லா எழுத்துக்களும் உபயோகத்திலிருக்கும் 200சுமார் வார்த்தைகளும், அவைகளால் ஏற்படக்கூடிய வாக்கியங்களும், சிறுவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். பிறகு காட்சிப் படங்களைப் பார்த்து அவைகளிலுள்ள விஷயங்களைச் சொல்லவும், வர்ணிக்கவும் அப்பியாசங்கள் கொடுக்கப்படவேண்டும். சுமார் 100 வினைச்சொற்கள் கற்பிக்கப்பட்டு அவைகளைச் சிறுவர்கள் வாக்கியங்களில் அமைத்துச் சொல்லும்படியும் எழுதும்படியுமான அப்பியாசங்கள் தரப்படவேண்டும். வினைச் சொற்களில் ஏவல் சொற்களை போதிப்பதற்கு ஒருவித உபகரணம் தயாரிக்கலாம்; வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளுடைய பெயர்களையும் தனித்தனி அட்டைகளில் எழுதி, அவர்கள் செய்யச்சொல்லும் காரியங்களை வேறு அட்டைகளில் எழுதி, அவ்விரண்டையும் அக்குழந்தையினிடம் கொடுத்தவுடன், அது மௌனமாய் அதைப்படித்து அவ்வட்டையில் குறித்திருக்கும் காரியத்தை செய்துமுடித்தல் வேண்டும். இம்மாதிரி செய்வதின் மூலம் மேல் வகுப்புகளில் கற்பிக்கப்படும் மௌன வாசிப்புப் பழக்கத்திற்கு இது ஒரு அடிப்படையாவதுடன் வினைச் சொற்களையும் தன் சுய முயற்சியால் கற்றுக்கொள்ள ஏது ஆகிறது. எல்லா எழுத்துக்களும் தனித்தனி அட்டைகளில் கத்தரித்து வைக்கப்பட்டு படங்களின் உதவியால் அதற்குத்தகுந்த வார்த்தைகளை அவ்வெழுத்துப் பெட்டியிலிருந்து பொறுக்கி வைக்கும்படிச் செய்யலாம்.

பொதுவாக முதல் வகுப்பு ஆசிரியர் எல்லாத் துறைகளிலும் கற்றுத் தேர்ந்தவராகவும், பாடசாலையில் படிக்கும் குழந்தைகள் இருக்கும் பிரதேசம், வாழ்க்கை முதலியவற்றை நன்கு அறிந்திருப்பதுடன் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடங்களைக் கூட்டியும் குறைத்தும் கற்பிக்கவேண்டும். இம்மாதிரி செய்வதில் சர்க்கார் பாடதிட்டத்தையும் அவர் நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டுமென்ற நியமம் இல்லை. ஆசிரியர்கள் யோசனை சக்திக்கேற்றபடி வார்த்தைகளையும் வாக்கியங்களையும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். விளையாட்டுகளும், உபகரணங்களும் உபயோகித்தல் பாஷையைப் பயில ஒருவித ஊன்றுகோல்களேயன்றி வேறல்ல. அதனால் சிறுவர்கள் தகுந்த தேர்ச்சி அடைந்தவுடன் இவ் ஊன்றுகோல்களை நீக்கிவிடுதல் நலம். முதல் வகுப்பில் கற்பிக்கப்படும் 300 வார்த்தைகள் அப்பாடசாலை இருக்கும் பிரதேசத்திற்கும் சிறுவர்களின் சுற்றுப்புறத்திற்கும் ஏற்றதாகவும் அவைகளில் குறைந்தது 100 வினைச்சொற்கள் உடையதாகவும் இருக்கவேண்டும்.

# பூகோள சாஸ்திரம்

S. ராமஸ்வாமி அய்யங்கார் தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, கன்னங்குருச்சி, சேலம் தாலூக்கா

எப்பாடத்தைப் போதிப்பதாயினும் முதன் முதலாக அப்பாடத்தைப் பற்றிய தேர்ந்த முன்னறிவையும், அப்பாடத்தைப் போதிக்கும் நோக்கத்தையும் திட்டத்தையும் நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும். நோக்கமும் திட்டமும் இல்லையாயின். வகுப்பறையில் ஓர் மாணவனிடமிருந்து ஒரு பாடப்புத்தகத்தைப்பெற்று, அதைப் படித்துக்காட்டி, ஏதோ ஒருவகையில் பொருள்கூறி, நாமும் பாடத்தை நடத்திஞேம் என்ற அளவில் பாட போதனை நிற்க ஏது ஆம். இதனாலேற்படும் கேடும் அளவிடற்கரியதாம். எனவே, எப்பாடமாயினும் எந்தெந்த விஷயங்களைப் போதிக்கவேண்டும், எந்நோக்கத்துடன் போதிக்கவேண்டும், அதற்குத் தகுந்த எம்முறையைக் கைக்கொள்ளவேண்டும் என்பவைகளை ஆராய்ந்து கிரமப்படி போதித்தல் ஆசிரியர்கடனும். பூகோள பாடத்தை எடுத்துக்கொள்வோமாயின், அதைப் போதிப்பதில் பழையகாலத்தில் கையாண்ட நோக்கத்திற்கும் திட்டத்திற்கும் தற்காலத்திய முறைகளுக்கும் இடையிலுள்ள அடிப்படையான வித்தியாசத்தைக் காணலாம். “பூமி மனிதனின் வீடு” என்ற கருத்துடன் பூகோளபாடத்தைக் கற்பதொழிந்து, ‘பூமியில் மனித வாழ்க்கை—மனிதன் எவ்வாறு தன் சுற்றுப் புறங்களுக்கிணங்க வாழ்க்கையை நடத்துகிறுன் என்பதைக் கொண்டு இது போழ்து பூகோள சாஸ்திரப் பாடம் கற்கப்படுகிறது.

ஆகவே, இக்கருத்துக் கிணங்க விஷயங்களைத் தொகுத்துத்திட்டம் வகுத்து, ஏற்ற முறையைக் கையாண்டு இப்பாடத்தை நடத்தல் முறையாம்.

இவ்வாறு போதிப்பதற்கு மூன்று முக்கிய விஷயங்களை அறிதல் வேண்டும்.

1. இயற்கை யமைப்பு

மலைகளின் அமைப்பு, பள்ளத்தாக்குகள், சமவெளி, ஆறுகளின் அமைப்பு, கடற்கரை, சீதோஷ்ண நிலை, இயற்கைத்தாவரம், உலோகம் ஆகிய இயற்கை அனுகூலங்களை அறிதல் அவசியம். இவைகளிலிருந்து மனித வாழ்க்கைக்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அச்சந்தர்ப்பங்களை மனிதன் தன் வாழ்க்கைக்குச் சாதகமாக அமைத்துக்கொண்டு, வாழ்க்கையைத் திறம்பட நடத்த முயலுகிறுன். அது போழ்து அவன் தன் சக்தியையும், முன்யோசனையையும், சுயமுயற்சியையும் உபயோகிக்கின்றுன். இயற்கை, மனிதனை இங்ஙனம் வசப்படுத்தி அவனை சுறுசுறுப்புள்ளவனுகவும், தீர்க்க ஆலோசனை செய்பவனுகவும், போட்டியிடுபவனுகவும் அல்லது ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடனிருந்து உதவி செய்பவனுகவும் ஊக்குகின்றது.

இவைகளிலிருந்து தனிப்பட்ட மனித வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் உண்டாகின்றன. இயற்கை, தன்குறைவினுல் மனிதனைச் சோம்பேறி ஆக்கலாம்; மனிதனின் அபிவிருத்தியைக் குறைக்கலாம். இயற்கை பல அற்புதங்களைச் செய்கின்றது. துறைமுகப் பட்டினம் அமையவேண்டிய இடத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. பெரிய பட்டினங்கள் உண்டாக வேண்டிய இடங்களையும், வியாபாரமார்க்கங்கள் அமையவேண்டிய இடங்களையும் காட்டிநிற்கின்றது.

மனிதனின் சுற்றுப் புற இயக்கமும், அதற்கிசைய மனிதனின் சக்தியும், அவைகளுக்கிணங்க ஏற்படும் இடையறு அபிவிருத்தியும், ஒருங்கே அறிவு, பாஷா அபிவிருத்தி கலைகள், பொருளாதார ஏற்பாடு, சமூகவாழ்க்கை யமைப்புத்திட்டம் ஆகியவற்றை உண்டாக்குகின்றன. எனவே மனிதன் திறம்பட வாழ்க்கையை நடத்த இடையுறுமற் செய்யும் வேலை அவன் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகி, உலகம்முழுதும் அது பரவி வியாபித்து வளரும்படி செய்கிறது.

இயற்கை அற்புதங்களில் சீதோஷ்ணம் வெகு முக்கியமானது; வாழ்க்கைக்கு அடிப்படையானது. அதைப் பொறுத்துதான் மனிதனின் உடை, வசிக்கவேண்டிய இடவசதி, ஆகாரம், தினசரி அல்லது பருவத்திற்கேற்ற வாழ்க்கை ஆகியவை அமைகின்றன.

எனவே இவ்விஷயங்களை ஒருங்கே உணர்ந்து, அவ்வம்சங்கள் எவ்வாறு உலகத்தில் மனித வாழ்க்கையை யாதரித்து சீர்திருத்துகிறது என்பதைக்காட்டி போதித்தல் அவசியம். இவ்வாறு இயற்கை அநுகூலங்களைப் பெற்றுள்ள பிரதேசங்களை ஒருமிக்க எடுத்து படங்கள், சார்ட்டுகள் மூலம் காட்டிப் போதித்தல் வேண்டும்.

## 2. பொருளாதார சம்பந்தம்

தினசரி வாழ்க்கையில் அநேக பொருள்களை உபயோகிக்கின்றோம். நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, நாம் குடியிருக்குமிடம், சமய்லுக்கும் மற்றும் இதர வேலைகளுக்கும் நாம் உபயோகிக்கும் கருவிகள், தொழில் செய்ய உபயோகிக்கும் கருவிகள் யாவும் நமக்குப் பல பிரதேசங்களிலிருந்து—இயற்கைப் பிரதேசங்களிலிருந்து—கிடைக்கின்றன. நாம் இப்பிரதேசங்களை நம்பி, இப்பிரதேச மக்களின் உதவியை நம்பி தினசரி வாழ்க்கையை நடத்துகிறோம்.

ஆதிகாலந் தொடங்கி வியாபார உணர்ச்சி மனிதனைப் பல இடங்களுக்குச் செல்லத் தூண்டியது. புதிய இடங்களைக் கண்டு பிடிக்கவும், ஏற்ற இடங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், வசதியான பல இடங்களைப் போரில் வென்று ஜெயிக்கவும், இதன் காரணமாக நாகரீகம் வளர்ந்து பரவவும், அதன்பயனுய் நாகரீகமில்லாத இடங்கள் நாகரீகத்தைப் பெறவும் ஏதுவுண்டாயிற்று.

இவ்விஷயங்கள் ஆசிரியரின் கவனத்திலிருக்க வேண்டும்.

3. சரித்திர வளர்ச்சி

மனிதன் தன்னை இதரப் பிரதேச மனிதர்களிடமிருந்து தனியே பிரித்துக்கொள்ள முடியாது. மானிட சமூகம் ஒரு குடும்பமாக உள்ளது. குடும்பத்தின் பல்வேறு அங்கத்தினர்களின் நல்வாழ்வு எவ்வாறு அவர்களின் ஒற்றுமையைப் பொறுத்திருக்கின்றதோ, அவ்வாறே உலக மக்களின் வாழ்வு ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடனிருந்து உதவிசெய்து கொள்வதால் அமைகிறது. எனவே மனிதன் எவ்வாறு இன்றைய நிலைமைக்கு வந்தான் என்பன போன்றவை சரித்திர வளர்ச்சியிலடங்கும். இவையனைத்தும் பூகோள சாஸ்திரபாட போதனையில் இடம்பெறவேண்டும். இவைகளை ஆசிரியர் நன்குணர்ந்து ஏற்றமுறைப்படி போதித்தல் முறையாம்.

ஆகையால் பூகோள சாஸ்திரப் பாடபோதனை மேலே சொல்லப்பட்ட இயற்கை வசதி, பொருளாதார சம்பந்தம், சரித்திரவளர்ச்சி என்ற மூன்று விஷயங்களையும் அடிப்படையாகக் கொண்டமைதல் வேண்டும்.

கீழ் வகுப்புகளுக்கு இப் பாடத்தைப் போதிக்கும் பொழுது உலகத்தில் பல்வேறு பிரதேசங்களில் வசதியையும் மக்களைப்பற்றியும் ஸ்வாரஸ்யத்தைத் தட்டி எழுப்பும்முறையில்சொல்லவேண்டும். இவ்வாறு சொல்லும்பொழுது வார்த்தைகளை மிக எளிய நடையில் சிறு குழந்தைகள் அறிந்து கொள்ளும் வகையில் இனிமையாகச் சொல்லவேண்டும். பல விஷயங்களைக் குறிக்கும் படங்கள், சார்ட்டுகள் இவைகளுடனேயே போதிக்கவேண்டும். பல்வேறு பிரதேச ஜனங்களின் உடை, ஆகாரம், குடியிருக்கும் வீடு, வியாபார வசதி ஆகியவைகளை படங்களைக் கொண்டு கதைகள் மூலம் போதித்தல் அவசியமாகும். இதே போன்று மனிதனின் பொருளாதார நிலை எவ்வாறு அவன் செய்யும் வேலையைப் பொறுத்திருக்கிறது என்ற விஷயத்தையும் சிறுகச் சிறுக எடுத்துக் காட்டிப் பொருளாதார விஷய ஞானத்தையும் ஊட்ட முயலவேண்டும். மேல் வகுப்புகளில் மாணவனுடைய சிந்தனை சக்தியையும், காரண காரியங்களை அறியும் யுக்தியையும் தட்டி எழுப்பும் முறையில் மேலே சொல்லப்பட்ட மூன்று விஷயங்களையும் கொண்ட பூகோள சாஸ்திர பாட விஷயங்களைப் போதித்தல் வேண்டும். வேடர் தொழில், மீன் பிடித்தல் வேலை ஆகியவற்றிலிருந்து ஆடு மாடு மேய்த்தல், விவசாயம், தொழிற்சாலை வேலை, ஆலைத் தொழில் வேலை, வியாபாரம் ஆகியவை எவ்வாறு இடத்தைப் பொறுத்தமைந்துள்ளன என்பதை மாணவர் அறியும்படி செய்தல் வேண்டும். உலக ஜனங்கள் எவ்வாறு ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்து வாழ்கின்றனர் என்ற விஷயமும், மனிதன் எவ்வாறு இயற்கையை தன் வசப்படுத்தி ஆளுகிறான் என்ற விஷயமும் பூகோள விளக்கப் படங்கள் மூலம் போதிக்கப்படல் வேண்டும்.

பூகோள பாடத்தை நன்கு தெரிந்துகொள்ளப் பல இடங்களுக்கு நேரில் சென்று பார்த்து அறிதல் மேலானது. எல்லா

இயற்கைப் பிரதேசங்களையும் நேரில் சென்று காணல் இயலாத காரியமாம். எனவே ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டு உலகத்தின் பல்வேறு இயற்கைப் பிரதேசத்தைப் போன்ற மாதிரி பிரதேசங்களைப் பொறுக்கி இயன்ற வரை அவ்விடங்களுக்குச் சென்று அவைகளின் மூலம் உலக விஷயங்களை அறிய முயலலாம். இவ்வாறு செய்தல் பூர்த்தியான அறிவைப் பெறுதல் போன்றதாகா தெனினும் ஒருவாறு பயன்படும்.

எப்பொழுதும் நாம் நம் கண்கொண்டு பார்த்தோ அல்லது பிறர் கண்களை உபயோகித்தோ விஷயங்களை அறிவதில்லை. சிந்தனை சக்தி மூலம் அறியவேண்டியவற்றை அறியலாம். இச் சிந்தனை சக்தியை உண்டாக்க நல்ல படங்கள், சார்ட்டுகள் ஆகியவை பெரிதும் பயன்படுகின்றன. எனவே இப்பாடத்தைப் போதிக்க இயற்கை யமைப்புப் படங்கள், இயற்கைப் பிரதேசங்களை விளக்கும் படங்கள், பல்வேறு இயற்கைப் பிரதேசங்களில் மனித வாழ்க்கை, மனிதன் தொழில் இவைகளை சித்திர விளக்க மூலம் காட்டும் படங்கள், மனிதன் எவ்வாறு இயற்கை யமைப்புக்குத் தக்க வாழ்க்கையை நடத்துகிறான் என்பதைக் காட்டும் படங்கள், வியாபார மார்க்கங்களை விளக்கும் படங்கள், இயற்கைப் பிரதேசங்களை அவ்வப்பொழுது விளக்க மணற்தட்டுகள்; அவைகளுக்கு வேண்டிய பொருள்கள் ஆகியவற்றை ஒவ்வொரு ஆசிரியரும் தயாரித்து வைத்துக்கொண்டு அவைகளின் மூலம் சிந்தனை சக்தியை ஊக்கிப் போதித்தல் பெரும் பயனை அளிக்கும்.

புதிய நூல்!

# திரு அருள் மொழி

**மூவர் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம்—
இவைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட
500 பாசுரங்கள் அடங்கியது.**

முதற் பாகத்தில் விரிவான பக்திசாரமும், இரண்டாம் பாகத்தில் பாசுரங்களும் அவைகட்கு உரையும் விளக்கக் குறிப்புகளும், மூன்றும் பாகத்தில் அப் பாடல்களிலிருந்து திரட்டிய சிவ விஷ்ணு ஸஹஸ்ரநாம அகவல்களும் உள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பக்கங்கள் : | 600 | தபால் கட்டணம் : | சாதா | காலிகோ |
| விலை சாதா ரூ. | 2—14—0 | புக் போஸ்டு | அணா 5 | அணா 6 |
| ,, காலிகோ ரூ. | 3—12—0 | ரிஜிஸ்டெர்ட் | ,, 8 | ,, 9 |

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக :

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.**

# செய்தித் திரட்டு

## அக்பராபாத் பாடசாலை, கோடம்பாக்கம்

21—10—43-ல், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதைப் பற்றியும், காலரா நோயைத் தடுப்பதற்கும் நிவர்த்திப்பதற்கும் அநுசரிக்கவேண்டிய முறைகளைப் பற்றியும் உபந்நியாசங்கள் நடைபெற்றன.

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

தசரா விடுமுறையில் உபாத்தியாயர்கள் திருத்தணி, சோளிங்கபுரம், திருவள்ளூர், கோவூர், குண்ணத்தூர் முதலிய இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்று வந்தனர். 3—11—43-ல் ஸ்கந்த சஷ்டி தினம் விசேஷ பூஜையும், பஜனையும் நடைபெற்றன. பாஷா அபிவிருத்தி சங்கத்தில் 'பொறுமை' என்பது பற்றி பேசப்பட்டது.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், தின்னனூர்

16—10—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்தியநாதய்யர் தலைமையில் கூடிற்று. அப்பொழுது யுத்த முன்னணி பிரசாரகர் ஸ்ரீ பிலிப் அம்மையார் இரத்தம் கொடுத்தலைப் பற்றி விரிவாகப் பேசிவிட்டு யுத்தத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு உபாத்தியாயர்கள் கிராமங்களில் பிரசாரம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள்.

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

28—10—43-ல், தமது தந்தையார் காலஞ் சென்றதை முன்னிட்டு நடந்த கூட்டத்தில் லால்குடி ஸ்ரீ பரமசிவ பிள்ளை இப்பாடசாலைக்கு ஓர் கட்டிடம் கட்டித் தருவதாக ரூ. 1000-மும் மேற்கொள்ளும் செலவையும் அளிப்பதாகச் சொன்னார்கள். கல்விக் கழகங்களுக்கு உதவிபுரிவதைப் பற்றி திவான்பகதூர் நாராயணசாமி பிள்ளை பாராட்டிப் பேசினர்.

## சுகாதார வாரக்கொண்டாட்டம், கண்டாச்சிபுரம்

18—10—43-லிருந்து நான்கு தினங்களிலும், ஊர்வலங்கள் போட்டிப் பந்தயங்கள், சுகாதார சொற்பொழிவுகள் நடைபெற்றன. முடிவு தினத்தில் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பழனிசாமி பிள்ளை தலைமையில் மாணவிகள் 'பத்மினி' என்ற நாடகத்தையும், மாணவர்கள் 'மனோகரன்' என்ற நாடகத்தையும் நடித்துக் காட்டினர்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், திண்டிவனம் வட்டம்

6—11—43-ல், ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ கிருஷ்ணசாமி தலைமையில் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது. பொருட் காட்சியும் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. சுமார் 300 ஆசிரியர்கள் வந்திருந்தனர். தலைவர் ஆரம்பக் கல்வியின் நிலைமையைப் பற்றியும், யுத்த முன்னணிபற்றியும் பேசினர்.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஆலந்தூர்

6—11—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கடசுப்பிரமணிய அய்யர் தலைமையில் கூடிற்று. அப்பொழுது பறங்கிமலை ஸ்ரீ பால்ராஜ் விக்டர் 'தற்கால யுத்தமும், சர்க்காருக்கு யுத்த முயற்சியில் ஆசிரியர்கள் எவ்வாறு உதவுவது' என்பதுபற்றி உபந்நியாசம் செய்தார். தலைவர் யுத்தக் கடன் பத்திரங்களைப் பற்றிப் பேசினார்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஊஞ்சலூர் (ஈரோடு)

16—10—'43-ல், ஸ்ரீ சற்குணம் தலைமையில் கூடிற்று. 'நல்ல பாடசாலையின் லட்சணங்கள்' என்பது பற்றிப் பலர் பேசினார்கள். போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராதாகிருஷ்ணய்யர், 'தற்கால யுத்தமும் நமது கடமையும்' என்பது பற்றி விரிவாகப் பேசினார்.

---

### ஆரம்ப பாடசாலை, சத்தியமங்கலம்

16—10—43-ல், பெற்றோர் சங்கம், ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ ராமன் மேனன் தலைமையில் கூடிற்று. மாணவிகளால் கும்மி, கோலாட்டம், டான்ஸ் முதலியன நடைபெற்றபின் தலைவர் பெற்றோர் சங்கத்தின் வேலைகளைப் பற்றிக் கூறினார். ஆசிரிய சங்கத்தின் விசேஷக் கூட்டத்தில் 'ஆசிரியர்களின் கடமை' என்பதைப் பற்றிப் பலர் பேசினார்கள்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஈரோடு

6—11—'43-ல், ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ ராமன் மேனன் தலைமையில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஓர் பொருட் காட்சியும் நிறுவப்பட்டிருந்தது. மிஷன் பாடசாலை மாணவ மாணவிகள் பல திறம்பட்ட விளையாட்டுகளால் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். ஸ்ரீ வேதமுத்து 'ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களது கடமையும்' என்பது பற்றி விரிவாகப் பேசினார்.

---

### லண்டன் மிஷன் பாடசாலை, கூனூர்

6—11—'43-ல், மானேஜர், ரெவரெண்டு ராபர்ட்ஸன், தலைமையில் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. மிஸ்டர் ராஜநாயகம் 'கல்வியின் அவசியம்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். மாணவ மாணவிகள் பல விளையாட்டுகளாலும், 'கல்வி' என்ற நாடகத்தாலும் எல்லாரையும் மகிழ்வித்தனர்.

---

### முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன், போதிநாயகனூர்

17—10—'43-ல், முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ சோமசுந்தர முதலியார் தலைமையில் கூடிற்று. யுத்த அலவன்ஸ், சம்பள உயர்வு முதலியன பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராஜமாணிக்கம் 'யுத்தத்திற்குப்பின் கல்வி' என்பது பற்றி உபந்நியசித்தார்.

---

### ஆரம்ப ஆசிரியர் யூனியன், தர்மபுரி தாலூகா

6—11—43-ல், பாலக்கோடு ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் தலைமையில் ஜெனரல்பாடி மீட்டிங் நடைபெற்றது. அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் சம்பளம், பஞ்சப்படி, பரீக்ஷை பேப்பர் திருத்தல் முதலியனபற்றி சில தீர்மானங்கள் நிறைவேறின.

**நகர் திரவிய சகாய ஆரம்ப ஆசிரியர் சங்கம், சேலம்**

22—10—43-ல், ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ, நடராஜன் தலைமையில் கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. முனிசிபல் காலேஜ் ஸ்ரீ கிருஷ்ணய்யர் 'யுத்தத்திற்குப்பின் கல்வி திருத்தியமைத்தல்' என்பது பற்றி உபந்யாசம் செய்தார்.

---

**போர்டு பாடசாலை, பெத்தநாயக்கன் பாளையம்**

13—11—43-ல், ஆத்தூர் ஹைஸ்கூல் ஆசிரியர்களும் சாரணர்களும் இவ்வூர் சாரணர்களுடன் சேர்ந்துகொண்டு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கரநாராயணய்யர் தலைமையில் சாரணப் போட்டி விளையாட்டுகள் நடத்தினார்கள். ஸ்கௌட் மாஸ்டர் ஸ்ரீ முனிசாமி சாரண இயக்கத்தைப்பற்றி விளக்கினார். ஸ்கௌட் மாஸ்டர் ஸ்ரீ செல்லமுத்து சாரண இயக்க விளையாட்டுகளைச் சிறுவர்களைக்கொண்டு நடத்திக் காட்டினார். போட்டிப் பந்தயத்தில் வெற்றிபெற்ற பெத்தநாயக்கன் பாளையம் ஹையர் எலிமெண்டரி பாடசாலை சாரணச் சிறுவர்களுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கினார்.

---

**போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, ஏத்தாப்பூர்**

6—11—43-ல், டாக்டர் ஸ்ரீ நடராஜன் தலைமையில் பெற்றோர் தினக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ விசுவநாதய்யர் 'யுத்தத்தால் நமது நிலைமை' என்பதுபற்றியும், ஸ்ரீ வேலாயுதம் பிள்ளை 'யுத்தத்தின் வரலாறும் நேசக் கட்சியின் வெற்றிகளும்' என்பதுபற்றியும் பேசினார்கள்.

---

**செல்லம் முதல்தர எலிமெண்டரி பாடசாலை, உரத்தூர்**

31—10—43-ல், டிப்டிஇன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோபாலய்யர் தலைமையில் பழைய மாணவர் சங்கம் திறவப்பட்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுமார் 200 பழைய மாணவர்கள் வந்திருந்தனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

**போர்டு உயர்தர ஆண்பாடசாலை, நாங்கூர்**

8—11—43-ல், இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் 'ஓர் அணுதினம்' கொண்டாடப்பட்டது. ஸ்ரீ பழனிவேலன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் 'செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவல்கள்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். செஞ்சிலுவைச் சங்கநிதிக்கு ரூ. 2—8—0 வசூல் செய்து அனுப்பப்பட்டது.

---

**இந்து எலிமெண்டரி பாடசாலை, குரங்கணி**

2—11—43-ல், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சீனிவாசன் தலைமையில் பெற்றோர் சங்கவிழா கொண்டாடப்பட்டது. 'பெற்றோர் கடமையும் கல்வியின் அவசியமும்' என்பதுபற்றி ஸ்ரீ மந்திரநாயகம் பிள்ளை பேசினார். பலவித கும்மி, டான்ஸ், காமிக், டிராமா முதலியன நடைபெற்றன.

---

**ஆரம்ப ஆசிரியர் சங்கம், தூத்துக்குடி**

18—10—43 முதல் 24—10—43 வரை கல்விவாரம் கொண்டாடப்பட்டது. பிஷப் நீல்துரை தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில் ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சர்க்

கார் கவனிக்கவேண்டுமென்று சொன்னார். பின்பு 'தற்கால யுத்தமும் வருங்காலக் கல்வியும், மாணவர்களின் சுகாதாரம்' என்பனபற்றிப் பலர் பேசினார்கள். வழக்கம்போல் பொருட்காட்சி, சங்கீதப்போட்டி கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன.

---

உபாத்தியாயர் சங்கங்கள்—சொக்கன் குடியிருப்பு, தட்டாமடம்

13—11—43-ல் இரு சங்கங்களும், அனுக்கிரகபுரத்தில், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சீனிவாசன் தலைமையில் கூடின. தலைவர் 6-ம் வகுப்பிற்குத் தாய்மொழி மாதிரிப்பாடமும், முதல் மூன்று வகுப்பிற்குத் தாய்மொழிப் பாடமும் கற்பிக்கும் முறைகளை நன்கு விளக்கி உபந்நியசித்தார்.

---

முசிரி தாலூகா எய்டெட் பாடசாலை ஆரம்ப ஆசிரியர் யூனியன்

17—10—43-ல், திருச்சி ஜில்லா உதவி கல்வி அதிகாரி ஸ்ரீ வீராசாமி பத்தர் தலைமையில் துரையூரில் மகாநாடு நடைபெற்றது. யுத்தப் பிரசாரகர்களால் யுத்த விஷயமாக பிரசங்கமும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ சுப்புரெட்டியாரால் 'ஆரம்பக் கல்வியும் நமது நாடும்' என்பதுபற்றி பிரசங்கமும் நடைபெற்றன. தலைவர் முடிவுரையில் ஆசிரியர்களின் நிலைமையைப்பற்றி விளக்கிக் கூறினார். கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சம்பள விகிதம், பாடசாலை நாட்கள், பிராவிடெண்டு பண்டு, முதலியனபற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

முனிசிபல் ஆரம்ப பாடசாலை, திருமாநிலையூர், (கரூர்)

20—10—43-ல், ஸ்ரீ கோபால் பிள்ளை தலைமையில் பெற்றோர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. ஆண் பெண் சகிதம் சுமார் 300 பேர் கூடியிருந்தனர். 'ஆசிரியரும் பெற்றோரின் ஒத்துழைப்பும்' என்பது பற்றி விவேகாநந்தம் பிரசங்கித்தார். புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரையில் பாடசாலை அபிவிருத்தியைப் பற்றிப் பாராட்டினார்.

---

ஆரம்ப ஆசிரியர் சங்கம், கரூர் வடக்கு சென்டர்

9—10—43-ல், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்தியநாதய்யர் தலைமையில் கூடிற்று. யுத்தப்போக்கும் நாட்டின் உணவு நிலையும், கிராம ஆசிரியர்கள் ஆற்றவேண்டிய தொண்டையும்பற்றிப் பலர் பேசினார்கள். சங்கத்தின் சார்பாக பத்து ரூபாய்க்கு யுத்த டிபன்ஸ் ஸேவிங் ஸர்டிபிகேட் வாங்கத் தீர்மானிக்கப்பட்டது.

---

செங்கற்பட்டு வட்ட ஆரம்ப ஆசிரியர் கழகம், செங்கற்பட்டு

13—11—1943-ல் நகராண்மைக் கழகத் தலைவர் ராவ்சாகிப் வேதாசல முதலியார் தலைமையில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஜில்லா மருத்துவ அதிகாரி ஸ்ரீ ஏகாம்பரம் பிள்ளை பேருதவியால் தேநீர் விருந்து நடைபெற்றது. பின்பு, 'ஆசிரியர்கட்கு வேண்டிய அறிவுரைகள்' என்பது பற்றி பல்லாரி அண்ணுசாமி முதலியார் சொன்மாரி பெய்தார். மாணவ மாணவிகள் கும்மி, நாடகம் முதலியனவைகளை நடித்துக் காட்டினர். ஜில்லா உதவி கல்வி யதிகாரி ஸ்ரீ சிங்காரவேல் முதலியார் 'தற்கால ஆசிரியர்கள்' என்பது பற்றிப் பேசினார்.

# பத்திராதிபர் குறிப்பு

## ஆசிரியர்களும் நான்கு சுதந்திரங்களும்

பதின்மூன்றும் தென்னிந்திய கல்விவாரத்தைச் சென்னையில் ஆரம்பித்து வைக்கும்பொழுது சென்னை சர்வ கலாசாலை உப அத்யக்ஷகராகிய டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியார், போருக்குப் பின் கல்வி திட்டம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைப்பற்றி ஓர் அரிய உபன்னியாசம் செய்தார். போருக்குப்பின் நம் நாட்டில், எல்லா மக்களுக்கும் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும், உயர்குலத்தோர்களுக்கும், தாழ்ந்த வகுப்பினர்களுக்கும், வித்தியாசமில்லாமல் அடிப்படையான ஆரம்பக் கல்வி அவசியம் என்பதை வற்புறுத்திப் பேசினார். அப்படி எல்லா மக்களுக்கும் ஆரம்பக் கல்வி வசதிகள் இலவசமாகவும் கட்டாயமாகவும் ஏற்பட வேண்டுமானல், அதற்கு சார்ஜண்டு துரை சொல்லியதுபோல் ஏராளமான பணம் வேண்டியிருக்கும். அதை துரைத்தனத்தாரும் பொதுமக்களும் சிலவிடத் தயாராகயிருக்கவேண்டும் என்றும், அப்படி செய்யாவிடில் நாடு முன்னேற்றமடைவது சுலபமல்ல என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். எந்தக் கல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தாலும், அதனல் நற்பயன் உண்டாகும்படி செய்வது ஆசிரியர்களே என்பதைக் குறிப்பிட்டு, ஆசிரியர்கள் தம் தொழிலைச் செவ்வனே செய்ய அவர்களுக்குச் சில சுதந்திரங்கள் அளிக்கப்படவேண்டுமென்று அவர் சொல்லியது எல்லா ஆசிரியர்களும், பொதுமக்களும் கவனிக்கத்தகுந்தது. பொதுமக்களுக்கென்று அமெரிக்க ஜனநாயகத் தலைவர் சொல்லிய நான்கு சுதந்திரங்கள்போல், டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியாரும், ஆசிரியர்களுக்கு நான்கு சுதந்திரங்கள் அளிக்கப்பட வேண்டுமென்று சொன்னர். வறுமையும் தங்கள் தொழில் முறையில் பிறருடைய இடைஞ்சலும் இல்லாமல் இருக்க ஆசிரியர்களின் உரிமையை பொதுஜனங்கள் அங்கீகரிக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஆமோதிப்பார்கள் என்று நாம் எண்ணுகிறோம். ஆசிரியர்களுக்கு போதுமான ஊதியம் அளிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் வறுமையுடனும் பட்டினியுடனும், உற்சாகத்துடன் சிறு பாலர்களுக்கு சிறந்த முறையில் நற்பயனுடன் கல்வி பயிற்றுவிப்பது மிகக் கடினமான வேலையாகும். கவலைகொண்ட ஆசிரியர்களை சிறு குழந்தைகளுக்கு கல்வி போதிக்கச் சொல்வதினல் அக்குழந்தைகளுக்கும் பெரும் தீங்கு இழைத்ததாகும். எனவே, வறுமையற்று இருப்பது ஆசிரியரின் முதல் உரிமையாகும். ஆசிரியர்களுக்கு பலர், எதை கற்பிக்கவேண்டும், எம்மாதிரி கற்பிக்கவேண்டுமென்றும் சொல்ல வருகிறார்கள். இவர்கள் தங்கள் சுயநலம் கருதும் கொள்கையை பாலர்களுக்கு போதிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகின்றார்கள். ஜெர்மனியிலும், ஜப்பானிலும், போர் வெறி கொண்டவர்கள், கல்வி திட்டத்தைத் தயாரிப்பதிலும் கல்வி போதிப்பதிலும் குருக்கிட்டிருப்பதால்தான் அந்நாட்டு இளைஞர்களுக்கு மிருகத்தனம் வளர்ந்துவருகிறது. அறிவு வளர்ச்சியும், விஷயங்களை நன்கு ஆராய்ந்து உண்மையை அறியும் சக்தியையும், நல்ல ஆரோக்கியத்துடன், பிறருடன் ஒத்துழைத்து சந்தோஷமாக காலத்தை செலவழிக்கும் சக்தியையும் பாலர்களுக்கு அளிப்பது கல்வியின் முக்கிய நோக்கம். இதை அறிந்து, தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களிடம் திட்டம், போதனு முறை, இவைகளை ஏற்படுத்த விட்டுவிட்டு, ஆசிரியர்கள் தொழிலில் மற்றவர்கள் குறுக்கிடாமலிருப்பதே நியாயம். நம் நாட்டில் ஆசிரியருக்கு இச்சுதந்திரம் இப்பொழுது உண்டா? டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியார் ஆசிரியர்களுக்கு இச்சுதந்திரம் இருக்கவேண்டுமென்பதை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆனல் கல்வி அபிவிர்த்திக்கு இன்னும் இரு சுதந்திரங்கள் ஆசிரியர்களிடம் தோன்றவேண்டுமென்பதை ஆசிரியர்கள் நன்கு கவனித்தல் வேண்டும். ஆசிரியர்கள் அறிவாளிகளாக இருக்கவேண்டும். விஷயங்களை நன்கு அறிந்தவர்களாகவும், புது விஷயங்களை அறிந்துகொள்ளும் ஆற்றலுடன் ஆசிரியர்கள் இருந்தால்தான் தங்கள் தொழிலைச் செவ்வனே செய்யமுடியும். தவிர ஆசிரியர்களிடம் ஜாதி, கக்ஷி வித்தியாசங்கள் இல்லாமல் இருக்கவேண்டும். அரசியல் க்கக்ஷி, மதக்கக்ஷி, ஜாதிக்கக்ஷி முதலியவைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு, பாலர்களை வித்தியாசமில்லாமல் நடத்தவோ அவர்களினிடையே ஒற்றுமை உணர்ச்சியை நன்கு நாட்டவோ சுலபமாயிராது. எனவே ஆசிரியர்கள் தம்மிடமிருந்து இக்கக்ஷிவாதங்களை அறவே ஒழித்து, பாலர் சேவை என்னும் ஓரே லக்ஷியத்தை தங்களாலியன்றவரை திறமையுடன் செய்துவருவது அவசியமாகும்.

**S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS**

520, High Road, Triplicane, Madras.

நீங்கள்

இந்த நிதியில்

சேர்ந்து விட்டீர்களா?

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள், ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

ரூபாய்க்கு 2 அணு விதம் போனஸ்
கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

உடனே சேருங்கள்!

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.


Regd. No. M. 3473


இந்திய தேயிலையின் அபிவிர்த்தி

இந்தியா அதைத் தனக்கே சொந்த மாக்கிக்கொண்டது



வருஷத்துக்குவருஷம் தேயிலைபருகுவோர்களின் எண்ணிக்கை இந்தியாவில் ஜாஸ்தியாகிக்கொண்டேவருகிறது. பத்துகோடிபவுண் தேயிலை வருஷத்துக்கு செலவாகிறது. இன்னும் வரவர அந்த அளவு ஜாஸ்தியாகிக்கொண்டேவரும். இந்தியாவின் ஜனத்தொகை நாற்பதுகோடி, ஆகவே தேயிலை உபயோகிப்போரின் எண்ணிக்கை இன்னும், பெருகவேண்டிய அளவு எவ்வளவு இடமிருக்கிறது! தேசியத்தொழில் தேசியபானம் என்று சொல்லத்தக்க தேயிலை பொதுமக்கள் விருப்பத்திற்கு பாத்திரமாகிவிட்டது. இந்தியத் தேயிலையைப் பருகுங்கள். உலகத்தில் இதைத்தவிர வேறு நல்ல பானமே கிடையாது.




இந்த விளம்பரத்தைக் கத்தரித்து எடுத்து உங்களுடைய பெயர் விலாசம் தொழில் முதலிய விபரங்களுடன் அனுப்புங்கள். விலாசம்: இந்தியத் தேயிலைக் கமிஷனர், இந்தியத் தேயிலை மார்க்கெட் விஸ்தரிப்பு போர்டு, தபால்பெட்டி நெ. 2172, கல்கத்தா. மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பினால், "டீ மார்ச் ஆப் இந்தியன் டீ" என்ற புத்தகம் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். அது தேயிலைத் தொழிலைப்பற்றியும் அது எவ்வளவு உன்னதமான பானம் என்பதைப்பற்றியும் விளக்கும் புத்தகம்.

# இந்தியத்தேயிலை

## உலகத்தின் உன்னத பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK-189


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Published b
Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 920, High Road, Triplicane Madra